11.07.2016

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

**நெற்பயிரில் புகையான் நோய்த் தாக்குதல்: கட்டுப்படுத்தும் வழிமுறைகள் அறிவிப்பு**

அனக்காவூர் வட்டாரப் பகுதியில் நெற்பயிரில் மீண்டும் புகையான் நோய்த் தாக்குதல் ஏற்பட்டுள்ளதால், அதனைக் கட்டுப்படுத்த வேளாண் துறை சார்பில் வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இது குறித்து அனக்காவூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தற்போது நெற்பயிர் புகையான் நோய், அதாவது பிபிஹெச் என்கிற பூச்சியின் தாக்கத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்த நோய் தாக்குதலுக்கு முன்னரே விவசாயிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால், எவ்வித பாதிப்புமில்லாமல் நெல் சாகுபடியில் மகசூல் ஈட்டலாம்.

புகையான் நோயின் அறிகுறிகள்: பிபிஹெச் பூச்சி தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து, தீய்ந்த நிலையில் காட்சியளிக்கும். முதிர்ச்சியடைந்த பயிர்கள் காய்ந்து வட்டமான திட்டுகளாக காணப்படும். மேலும், பயிர்கள் சாய்ந்து விடும். நெற்பயிர்கள் தீய்ந்த அறிகுறியிலிருந்து அதில் இருக்கும் கரும்புகைப்பூசனத்தின் மூலமாக வேறுபட்டுக் காணப்படும்.

பூச்சியின் அறிகுறிகள்: இலைகளில் 2-12 தொகுதிகளாக முட்டைகள் இடப்பட்டிருக்கும். வெள்ளையான ஒளி ஊடுருவுகின்ற மெலிந்த உருளை வடிவிலும், வளைவாகவும் முட்டைகள் 2 வரிசைகளில் இடப்பட்டிருக்கும். புதிதாக வெளிவந்த இளம் உயிரிகள் பருத்தி போன்ற வெண்மையான நிறத்திலும், வளர்ந்த பூச்சிகள் பழுப்பு நிறத்திலும் காணப்படும்.

அந்துப்பூச்சி முதிர்ச்சியடைந்த தத்துப்பூச்சி மஞ்சளான பழுப்பு முதல் கரும்பழுப்பு நிற உடலைக் கொண்டிருக்கும். அதன் இறகு நிறமில்லாமல் மக்கிய மஞ்சள் நிறமாக காணப்படும்.

கட்டுப்படுத்தும் முறை: தேவைக்கு அதிகமான தழைச்சத்து உரங்களை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். தேவைக்கு அதிகமான நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும். விளக்குப் பொறி அமைத்து புகையானை கவர்ந்து அழிக்கலாம்.

வயலில் தண்ணீர் வடிந்த பிறகு மருந்து தெளிக்க வேண்டும். வேப்ப எண்ணெய் 15 லிட்டர் ஹெக்டேர் மற்றும் இலுப்பை எண்ணெய் 30 லிட்டர் ஹெக்டேர், வேப்பங்கொட்டைச் சாறு 25 கிலோ ஹெக்டேர் ஆகியவை இட வேண்டும்.

ரசாயன மருந்து முறை: ஏக்கருக்கு இமிடாகுளோபிரிட் 40-50 எம்எல், ஏக்கருக்கு பிப்ரோனில் 400-600 எம்எல், ஏக்கருக்கு பிப்ரோப்சின் 320 எம்எல், ஏக்கருக்கு பாஸ்போமிடான் 800 எம்எல் போன்ற பல மருந்துகளை இட்டு புகையான் தாக்குதலில் இருந்து நெல்பயிர்களை பாதுகாத்து பயனடையலாம் என அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அதிக மகசூலுக்கு திருந்திய நெல் சாகுபடி**

தாமிரவருணி பாசனத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி பாசனம் செய்யுமாறு வேளாண்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அம்பாசமுத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பண்டை காலத்தில் நெல் சாகுபடியில் விவசாயிகள் உயர் மகசூல் பெற்று வந்தனர். அத்தகைய உயர்ந்த மகசூலைப் பெறும் வகையில் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி அதிக மகசூல் பெறலாம்.

தரமான விதை: நெல் சாகுபடியில் சான்று பெற்ற உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு இரக விதைகளை பயன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு மூன்று கிலோ வீதம் விதை போதுமானது. இதனால் விதைக்கான செலவு வெகுவாகக் குறைகிறது.

ஒரு ஏக்கர் நடவு செய்ய ஒரு சென்ட் அதாவது 40 சதுர மீட்டர் பரப்பளவில் மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைக்க வேண்டும். இயந்திர நடவு மேற்கொள்ள, பாய்களிலோ, டிரேக்களிலோ நாற்றுகளை விட வேண்டும்.

நாற்றின் வயது: 10 முதல் 14 நாள் வயதுடைய இளம் நாற்றுக்களை, நன்கு சமன் செய்த வயலில் நடவு செய்தல் வேண்டும். ஒரு குத்துக்கு ஒரு நாற்று வீதம் ஒற்றைக் குத்து முறையில் மட்டுமே நடவு செய்ய வேண்டும்.

சதுர நடவு: வரிசைக்கு வரிசை முக்கால் அடி அதாவது (22.5 செ.மீ), குத்துக்குக் குத்து முக்கால் அடி (22.5 செ.மீ), என்ற இடைவெளியில் சதுர நடவு மேற்கொள்ள வேண்டும். சதுர நடவுக்கு அடையாளம் இட மார்க்கர் கருவியைப் பயன்படுத்த வேண்டும்.

வேளாண் திட்டம்: நடவு இயந்திரம் மூலம் நெல் நடவு மேற்கொள்ளலாம். தமிழக அரசு விவசாயிகளிடையே இயந்திர நடவு முறையை ஊக்குவிக்கும் வகையில், நடவுக்குப் பிந்தைய மானியமாக ஹெக்டேருக்கு ரூ. 5 ஆயிரம், அதாவது ஒரு ஏக்கருக்கு ரூ. 2 ஆயிரம் மானியமாக வழங்குகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் இயந்திர நடவு மேற்கொண்டு, அரசு வழங்கும் மானிய உதவியை வேளாண் துறையின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

நீர்ப்பாசனம்: நீர் மறைய நீர் கட்டு, நிறைய வரும் நெல்கட்டு என்ற அனுபவ மொழிக்கு ஏற்ப ஒரு விரற்கடை அளவுக்கு, அதாவது 2.5 செ. மீ அளவுக்கு மட்டுமே நீர் நிறுத்தி, நீர் மறைய நீர் கட்ட வேண்டும். நடவு செய்த பின் 10 தினங்களுக்கு ஒரு முறை கோனோவீடர் (அல்லது) விசை களைக் கருவியைக்கொண்டு நான்கு முறை குறுக்கும் நெடுக்குமாக ஓட்டி, களையினை மண்ணுக்குள் மடக்கி உரமாக்க வேண்டும்.

வேண்டுகோள்: அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்ற பழமொழிக்கு ஏற்ப இலை வண்ண அட்டையை உபயோகித்து, இலை நிறத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, நிறச்செறிவு 4 இருக்குமாறும், தேவைக்கேற்ப தழைச்சத்து இட்டு உர நிர்வாகம் செய்திட வேண்டும். நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி உயர் மகசூல் மூலம் உன்னத இலாபமும் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாற்று நடவு முறையில் துவரை சாகுபடி செய்ய வலியுறுத்தல்**



நாற்று நடவு முறையில் துவரை சாகுபடி செய்ய வேளாண் துறை அதிகாரிகள் வலியுறுத்தினர்.

வேளாண் துறை மூலம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நாற்று நடவு முறையில் துவரை பயிர் சாகுபடி செய்ய நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ளது. இந் நாற்றங்காலை வியாழக்கிழமை பார்வையிட்டு, வேளாண் துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) பாஸ்கரன், வேளாண் உதவி இயக்குநர் (நல்லம்பள்ளி) அமுதவள்ளி ஆகியோர் விவசாயிகளுக்கு, துவரை நாற்று நடவுமுறை தொழில்நுட்பம் குறித்து விளக்கமளித்துப் பேசியது: தருமபுரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு சுமார் 23 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் துவரை சாகுபடி செய்யப்பட்டது. இதில் நல்லம்பள்ளி வட்டாரத்தில் மட்டும் 2,500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டது. ஜூன், ஜூலை மாதங்கள் துவரை சாகுபடி செய்ய ஏற்ற பருவமாகும்.

துவரை பயிர் நாற்று நடவு முறையில் சாகுபடி செய்ய ஏக்கருக்கு ஒரு கிலோ விதை போதுமானது. ஒரு கிலோ விதையுடன் 2 கிராம் திரம் அல்லது டிரைக்கோடெர்மா விரிடி பூஞ்சாணைக்கொல்லி மருந்தைக் கலந்து, 24 மணி நேரம் வைத்திருந்து பின் ஒரு பாக்கெட் ரைசோபியம் நுண்ணுயிர் கொண்டு விதைநேர்த்தி செய்து 200 காஜ்

தடிமன் பாலித்தீன் பைகளில் மணல், மண், எரு ஆகியவற்றை சம அளவில் கலந்து பைகளை நிரப்பி விதைகளை 1 செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். பைகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்க 4 துளைகள் இடவேண்டும். விதைப்பு செய்யப்பட்ட பாலித்தீன் பைகளை சூரிய ஒளி, நிழல் உள்ள இடத்தில் வைத்து, நீர் தெளித்து 30 முதல் 40 நாள்கள் பராமரித்து வயலில் நடவு செய்யலாம். துவரையில் ஊடுபயிராக உளுந்து, பச்சைப் பயறு, தட்டைப் பயிறு மற்றும் நிலக்கடலை ஆகிய பயிர்களை விதைப்பு செய்து, பின் 5 (அ) 6 அடிக்கு ஒரு உழவு சால் ஏற்படுத்தி துவரை நடவு செய்தால் ஊடுபயிர் மூலம் உபரி வருமானம் பெறலாம். பயிரின் முக்கிய வளர்ச்சி நிலைகளான நடவு, பூக்கும் பருவம், காய்பிடிக்கும் பருவம் ஆகிய பருவங்களில், தவறாமல் 3 முதல் 4 நீர்ப்பாசனம் அளிக்க வேண்டும். மண் அணைப்பதால் களை கட்டுப்பாடும் ஏதுவாகிறது. பயிர்களுக்கு சரியான அளவு இடைவெளி மற்றும் போதிய அளவு நீர்ப்பாசனம் அளிப்பதால் நிலம், காற்று, ஈரப்பதம் மற்றும் பயிர் சத்துக்கள் ஆகியவை சரிவிகிதத்தில் பயிருக்கு கிடைக்கும். இதனால் பயிர் மகசூல் அதிகரிக்கிறது. பக்கவாட்டு கிளைகள் அதிகளவில் உருவாவதன் மூலம் அதிக காய்கள் உற்பத்தியாகி மகசூல் அதிகரிக்கிறது. இந்த வழிமுறைகளைப் பின்பற்றி துவரை சாகுபடி செய்ய வேண்டும் என்றனர்.

**விவசாயம் சார்ந்த தகவல்களை செல்லிடப்பேசியில் பெறும் திட்டம்**

விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் வேளாண் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கான கிசான் சுவிதா அலைபேசி செயலித் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து ஆட்சியர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: விழுப்புரம் மாவட்டத்தில், வேளாண் பொருள்களைச் சந்தைப்படுத்த 18 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களும், 6 உழவர் சந்தைகளும் இயங்கி வருகிறது. இதில் நெல், பருத்தி, வேர்க்கடலை, உளுந்து உள்ளிட்ட பல வகை விவசாய உற்பத்திப் பொருள்களை விற்பதற்கும், சேமித்து வைப்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக விவசாயம் மேற்கொள்ள ஏற்ற காலநிலை, பருவ நிலை மாற்றம், விளைபொருள் சந்தை நிலவரம், இடுபொருள் இருப்பு நிலவரம், பயிர் சாகுபடி தொழில் நுட்பங்கள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள மத்திய, மாநில அரசுகள் கிசான் சுவிதா அலைபேசி செயலியை அறிமுகம் செய்துள்ளது.

இதன் மூலம் விவசாயிகள் மேற்கண்ட தகவல்களை தங்கள் செல்லிடப்பேசி மூலம் எளிதாகத் தெரிந்துகொள்ள முடியும். மேலும், தங்களுக்குத் தேவையான தகவல்களைக் குறிப்பிட்டுத் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ள முடியும். உள்ளூர், வட்டாரச் சந்தை நிலவரங்களையும் இதில் பெறலாம். ஏற்றச் சூழலில் விவசாயம் செய்வதற்கும், உரிய நேரத்தில் விளை பொருள்களை விற்பனை செய்வதற்கும், இருப்பு வைத்து விற்பதற்கும் இது பயனுள்ளதாக அமையும்.

விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் கிசான் சுவிதா மென்பொருள் செயலியினை, தங்களது செல்லிடப்பேசியில் பதிவிறக்கம் செய்து, தகவல்களைக் கேட்டு பயன்பெறுமாறு அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**"விவசாயிகள் மானிய விலையில் வேளாண் கருவிகள் பெறலாம்'**

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2016 ஆம் ஆண்டை சர்வதேச பயறு வகைகள் ஆண்டாக 68 ஆவது சர்வதேச சபை அறிவித்துள்ளது. அதன்படி, நிகழாண்டில் பயறு உற்பத்தியை அதிகரித்திட பயறுவகைப் பயிர்களுக்காக தூத்துக்குடி மாவட்ட வேளாண் துறைக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.5.66 கோடி நிதி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உயர் விளைச்சல் தரக்கூடிய விதைகள் கிலோவுக்கு ரூ.25 மானியத்திலும், விதைகளை உற்பத்தி செய்யும் விதைப் பண்ணை விவசாயிகளுக்கு உற்பத்தி மானியமாக கிலோவுக்கு ரூ.25, மேலும்,ஹெக்டருக்கு ரூ.5,000 மானியத்தில் முன்னேறிய தொழில்நுட்ப செயல்விளக்கத் திடல்கள் அமைக்கவும், நிலத்தை உழுது பண்படுத்திட டிராக்டர்கள் வழங்கவும் ரூ.1,25,000 மானியம், ரூ. 35,000 மானியத்தில் சுழற்கலப்பைகளும் வழங்கப்பட உள்ளன.

மானாவாரிப் பகுதிகளில் உள்ள ஒரு சில கிணறுகளில் இருந்து பயிருக்கு பாய்ச்சப்படும் நீரின் விரயத்தை தவிர்த்திட நீர் கடத்தும் குழாய்கள் ஹெக்டருக்கு

ரூ.15,000 மானியத்திலும், விதைக்கும் கருவி கொண்டு வரிசை விதைப்பு செய்யும் விவசாயிகளை ஊக்குவித்திட ஹெக்டருக்கு ரூ.1000 மானியமும், ஹெக்டருக்கு ரூ.650 வீதம் டி.ஏ.பி தெளிப்பு மற்றும் பயறு அதிசயம் தெளிப்பு மானியம் வழங்கப்பட உள்ளது.

மேலும், பயிர் பாதுகாப்பு மருந்துகள், களைக்கொல்லி, நுண்ணூட்ட உரம் ஆகியவை எக்டருக்கு ரூ.500 மானியத்திலும், ஜிப்சம் எக்டருக்கு ரூ.750 மானியத்திலும் வழங்கப்பட உள்ளது. இவை அனைத்தின் பலனாக நிகழாண்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் பயறு உற்பத்தியை அதிகரித்திட வேளாண்மைத்துறை திட்டமிட்டுள்ளது.

எனவே, தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் இந்தத் திட்டத்தின் மூலமாக நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து பயறுவகைப் பயிர்களின் பரப்பை அதிகரித்து அதிக விளைச்சல் பெற சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உழவர் பாதுகாப்பு திட்டத்தில் ரூ.19 லட்சம் நல உதவிகள்:ஆட்சியர் வழங்கினார்**

உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 76 பயனாளிகளுக்கு ரூ.19 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி சனிக்கிழமை வழங்கினார்.

திருத்தணி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில், உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், திருத்தணி மற்றும் பொன்னேரி வட்டத்தில் 76 பயனாளிகளுக்கு ரூ.19 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவியையும், 2015- 2016 ஆம் ஆண்டுக்கான தீண்டாமையை கடைப்பிடிக்காமல் நல்லிணக்கத்துடன் வாழும், வேலஞ்சேரி ஊராட்சிக்கு ரூ.10 லட்சத்துக்கான காசோலையையும் ஆட்சியர் எ.சுந்தரவல்லி வழங்கி பேசியதாவது:

அரசு அலுவலர்கள் கிராமங்களுக்கு சென்று பொதுமக்களின் கோரிக்கைகள், குறைகளை மனுக்களாகப் பெற்று, தீர்வு காணப்படுகிறது. அம்மா திட்டம் முகாமில், இணையதளம் மூலம் பட்டா மாறுதல், சாதிச்சான்று, வருமானச் சான்று உள்ளிட்ட பல்வேறு சான்றுகள் உடனடியாக வழங்கப்படுகிறது.

மேலும், பொதுசேவை மையம் மூலமாகவும் இது போன்ற சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது என்றார்.

நிகழ்ச்சியில் வட்டாட்சியர் அபிஷேகம், அரக்கோணம் எம்.பி., கோ.அரி, திருத்தணி எம்.எல்.ஏ., பி.எம். நரசிம்மன், காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்ட ஆவின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தலைவர் த.சந்திரன், திருத்தணி ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் இ.என். கண்டிகை எ. ரவி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சு. சிவகாமி, திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் கு. விமல்ராஜ், ஊராட்சி மன்ற தலைவர் செல்வம், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் டி.டி.சீனிவாசன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**கால்நடைகளுக்கு காப்பீடு செய்யலாம்**

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள், தங்களது கால்நடைகளுக்கு காப்பீடு செய்து பயனடையலாம் என மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு அரசு கால்நடை காப்பீட்டுத் திட்டத்தில், காப்பீடு செய்யப்படும் கால்நடைகளுக்கு நோய், இயற்கை இடர்பாடுகள் மூலமாக இறப்பு ஏற்பட்டால், இழப்பை ஈடுசெய்து வேறு கால்நடைகள் பெறுவதற்கு உறுதி செய்யப்படும்.

இத்திட்டத்தில் காப்பீடு செய்து கொள்ள, கால்நடை வளர்ப்போரின் பங்காக ரூ.20 ஆயிரம் மதிப்புள்ள மாட்டினத்திற்கு பொதுப் பிரிவினர் ரூ.250-ம், தாழ்த்தப் பட்டோர் ரூ.150-ம், ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள மாட்டினத்திற்கு பொதுப் பிரிவினர் ரூ.396-ம், தாழ்த்தப்பட்டோர் ரூ.293-ம், ரூ.30 ஆயிரம் மதிப்புள்ள மாட்டினத்திற்கு பொதுப் பிரிவினர் ரூ.539-ம், தாழ்த்தப்பட்டோர் 438-ம், ரூ.35 ஆயிரம் மதிப்புள்ள மாட்டினத்திற்கு பொதுப் பிரிவினர் ரூ.683-ம், தாழ்த்தப்பட்டோர் ரூ.579-ம், ரூ.40 ஆயிரம் மதிப்புள்ள மாட்டினத்திற்கு பொதுப் பிரிவினர் ரூ.820-ம், தாழ்த்தப்பட்டோர் ரூ.723-ம் செலுத்த வேண்டும்.

இம்மாவட்டத்தில், கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளை காப்பீடு செய்து கொள்ள, அருகிலுள்ள கால்நடை உதவி மருத்துவர்களை அணுகி பயன்பெறலாம்.

**சிறு தானியங்களிலிருந்து உணவு தயாரிக்க பயிற்சி**

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறு தானியங்களிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி வரும் 12, 13 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

இந்தப் பயிற்சியில், கேழ்வரகு, கம்பு, சோளம், தினை, வரகு, சாமை போன்றவற்றில் இருந்து பாரம்பரிய உணவுகள், பிழிதல், அடுமனைப் பொருள்கள், உடனடி தயார் நிலை உணவுகள் தயாரிப்பு போன்ற தலைப்புகளில் விளக்கம், பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள் ரூ. 1,500 செலுத்தி தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

நேரில் வந்து பெயரைப் பதிவு செய்து கொள்ள இயலாதவர்கள், பயிற்சிக் கட்டணத் தொகையை வரைவோலை எடுத்து, "பேராசிரியர், தலைவர், அறுவடை பின்சார் தொழில் நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை' என்ற பெயரில் பாரத ஸ்டேட் வங்கியில் பெறத் தக்க வகையில் அனுப்ப வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு, பேராசிரியர், தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி, ஆராய்ச்சி நிலையம், கோவை - 3 என்ற முகவரியில் நேரிலோ, 0422-661 1340, 661 1268 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். பெயர்களை வரும் ஜூலை 12-ஆம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று பல்கலைக்கழக செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**நிலக்கடலைக்கு நல்ல விலை கிடைக்கும்: வேளாண் பல்கலைக்கழகம் தகவல்**

சாகுபடி பரப்பளவு குறைந்தது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த ஆண்டு நிலக்கடலைக்கு நல்ல விலை கிடைக்கும் நிலை உருவாகி இருப்பதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மத்திய வேளாண் அமைச்சகத்தின் 3-ஆவது முன்கூட்டிய அறிவிப்பின்படி, 2015-16ஆம் ஆண்டில் நிலக்கடலை 44.60 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 68.86 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. குஜராத், ஆந்திரம், தமிழகம், கர்நாடகம், மகாராஷ்டிரம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் நிலக்கடலை உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும்.

தமிழகத்தில் நிலக்கடலை 2.17 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 5.43 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மாவட்டங்களில் நிலக்கடலை அதிகமாக விளைவிக்கப்படுகின்றன.

கடந்த 2014-15ஆம் ஆண்டில் இந்தியா 7.88 லட்சம் டன்கள் நிலக்கடலையை ஏற்றுமதி செய்த நிலையில், 2015-16ஆம் ஆண்டில் அது 5.36 லட்சம் டன்களாக குறைந்துள்ளது. இந்திய எண்ணெய்வித்து ஏற்றுமதி மேம்பாட்டு மையம், வியட்நாமில் இருந்து இறக்குமதியாகும் நிலக்கடலைக்கு விதித்த தடையாலும், உள்நாட்டு சந்தையில் நிலக்கடலையின் விலை உயர்வாலும் 2015-16ஆம் ஆண்டில் நிலக்கடலை ஏற்றுமதி 32 சதவீகிதம் குறைந்துள்ளது.

மேலும், இந்தியாவில் நிலக்கடலை சாகுபடிப் பரப்பளவு குறைந்துள்ளது. நாட்டின் நிலக்கடலை உற்பத்தியில் பெரும்பங்கு வகிக்கும் குஜராத் மாநிலத்தில் பருவமழை பொய்த்ததால் நிலக்கடலைச் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. அதேபோல், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலும் நிலக்கடலை சாகுபடிப் பரப்பளவு குறைந்துள்ளது.

சாதகமற்ற பருவநிலையால் ஏற்பட்ட நிலக்கடலையின் உற்பத்தி குறைவு 15 சதவீதமாகும். இதுவும் விலை ஏற்றத்துக்கு காரணமாகும். அதேநேரம் கடந்த ஆண்டைக் காட்டிலும் தற்போது கடலை எண்ணெய் தேவை அதிகரித்துள்ளது. எனவே, நிலக்கடலைக்கு இந்த ஆண்டில் நல்ல விலை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கும் விலை முன்னறிவிப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 13

ஆண்டுகளாக திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய நிலக்கடலையின் விலையை ஆய்வு செய்து, சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது.

ஆய்வு முடிவின் அடிப்படையில், நிலக்கடலையின் பண்ணை விலை வரும் செப்டம்பர்- அக்டோபர் மாதங்களில் கிலோ ரூ.60 முதல் ரூ.65 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்களது விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இது குறித்த விவரங்களுக்கு உள்நாட்டு, ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தையோ, எண்ணெய்வித்துகள் துறையையோ தொடர்பு கொள்ளலாம். தொடர்பு எண்கள் 0422-2431405, 2450812.

## 12,13-இல் நாட்டுக்கோழி வளர்ப்புப் பயிற்சி

நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி வகுப்பு ஈரோட்டில் ஜூலை 12-ஆம் தேதி தொடங்குகிறது.

இதுகுறித்து, ஈரோடு-சத்தி சாலையில் செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் யசோதை சனிக்கிழமை வெளியிட்ட செய்தி:

கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம் ஜூலை 12-ஆம் தேதி தொடங்குகிறது. இந்தப் பயிற்சி முகாம் 2 நாள்கள் நடைபெறும்.

பயிற்சியில், நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்து விரிவான பாடங்கள் நடத்தப்படுவதுடன் கலந்துரையாடல், விடியோ படக் காட்சிகள், கேள்வி - பதில் நிகழ்ச்சி ஆகியன நடைபெறவுள்ளது.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் பயிற்சி மையத்தை தொடர்பு கொள்ளலாம். ஈரோடு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயப் பண்ணையாளர்கள், மகளிர் சுயஉதவிக் குழுவினர் இப்பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்டக்கலைத் துறையில் ரூ.4 கோடி மதிப்பில் வளர்ச்சிப் பணிகள்: ஆட்சியர் தகவல்

நீலகிரி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் ரூ. 4 கோடி மதிப்பீட்டில் தோட்டக்கலைத் துறை சார்பில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

நீலகிரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், நடப்பு நிதியாண்டில் பரப்பு விரிவாக்கத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் ரூ. 2.60 கோடி மதிப்பிலான காய்கறி விதைகள் வழங்கப்படவுள்ளன. குறுமிளகு நாற்றுகள், இடுபொருள்கள் ரூ. 20 லட்சத்திலும், பூண்டு விதைகள் மற்றும் இடுபொருள்கள் ரூ.12 லட்சத்திலும், ஆரஞ்சுப் பழ ஒட்டுச் செடிகள், கொய்மலர் நாற்றுகள் ரூ. 10 லட்சம் மதிப்பிலும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 47 லட்சம் மதிப்பில் பசுமைக் குடில்களும், ரூ. 25 லட்சம் மதிப்பில் நிழல்வலைக் கூடாரங்களும் அமைக்கப்படவுள்ளன.

மேலும், இயந்திரமயமாக்கல் திட்டத்தின்கீழ் ரூ. 8 லட்சம் மதிப்பில் உழவு இயந்திரங்களும், ரூ. 18 லட்சம் மதிப்பில் தெளிப்பான்களும் வழங்கப்படவுள்ளன.

இயற்கை விவசாயத்தைப் பாதுகாக்கும் வகையில் மண்புழு உர மேடை ரூ. 5 லட்சத்திலும், மண்புழு உரப் படுக்கை, தேனீ வளர்ப்புப் பெட்டி மற்றும் தேன் எடுக்கும் இயந்திரம் ஆகியவை ரூ. 2 லட்சத்திலும் வழங்கப்படும். விவசாயத்தின் பல்வேறு நவீனத் தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்வதற்காக மாநிலத்திற்குள் நடத்தப்படும் பயிற்சிகளுக்கு ரூ. 11 லட்சமும், பிற மாநிலங்களில்

நடத்தப்படும் பயிற்சி மற்றும் சுற்றுலாவுக்கு ரூ. 4.5 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் ரூ. 6.5 லட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்படும்.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டங்களின்கீழ் பயனடைய விரும்பும் விவசாயிகள் தோட்டக்கலை உதவி இயக்குநர்

மற்றும் தோட்டக்கலை தகவல் மையத்தை அணுகி விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு**

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்ததை அடுத்து அந்த அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் திறக்கப்பட்ட தண்ணீர் கடந்த ஒரு வாரமாக மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது். இந்த நிலையில் சனிக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 4,712 கன அடியாக இருந்தது. இது ஞாயிற்றுக்கிழமை காலை 5,159 கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை காலை 44.69 அடியாக இருந்தது, ஞாயிற்றுக்கிழமை காலை 45.15 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர்மட்டம் நாளொன்றுக்கு அரைஅடி வீதம் உயர்ந்து வருகிறது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்கு நொடிக்கு 2,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 14.89 டி.எம்.சி.யாக இருந்தது.

**பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.78.69 லட்சத்துக்கு பருத்தி கொள்முதல்**

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மறைமுக ஏலத்தில் ரூ. 78 லட்சத்து 69 ஆயிரத்து 612 மதிப்பிலான பருத்தி கொள்முதல் செய்யப்பட்டது. பாபநாசம் வட்டாரத்தைச் சேர்ந்த 941 விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைந்த பருத்தியை விற்பனை செய்ய பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு கொண்டு வந்தனர். அங்கு தஞ்சாவூர் விற்பனை குழுச் செயலாளர் மு. ரவி, விற்பனைக் கூட கண்காணிப்பாளர் மு. பிரியாமாலினி, மேற்பார்வையாளர் ப. சங்கர்ராஜா உள்ளிட்டோர் முன்னிலையில் பருத்தி மறைமுக ஏலம் நடைபெற்றது. இதில் கோவை, செம்பனார்கோவில், கும்பகோணம், நாகப்பட்டினம், விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர்.

இதில் குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்ச விலையாக ரூ. 5,822-க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 5,116-க்கும், சராசரி விலையாக ரூ. 5,673-க்கும் விலை போனது. கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் பருத்தி அதிகவிலை போனதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**சம்பா சாகுபடிக்கு தயாராகும் கடைமடைப் பகுதி விவசாயிகள்**

குறுவை பொய்த்துவிட்டதால் ஒரு போக சாகுபடிக்கு (சம்பா) கடைமடைப் பகுதி விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் தொடர்ந்து கடந்த 5 ஆண்டுகளாக மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12-ஆம் தேதி தண்ணீர் திறக்காததால் குறுவை சாகுபடி பொய்த்து விட்டது. இதனால் காலம் தாழ்த்தி தண்ணீர் பாசனத்துக்கு கிடைப்பதால் ஒரு போக சம்பா சாகுபடியை மட்டும் விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி ஆகிய முப்போகமும் சுமார் 20 லட்சம் ஏக்கரில் விவசாயிகள் மேற்கொள்வது வழக்கம். இதில் கடைமடைப் பகுதியான திருவாரூர் மாவட்டத்தில் வழக்கமான காலத்தில் காவிரியில் தண்ணீர் வந்தால் குறுவையில் 1 லட்சம் ஏக்கரும், சம்பாவில் 3 லட்சம் ஏக்கரிலும் சாகுபடி நடைபெறும்.

காவிரியில் தண்ணீர் வராத நிலையில் கடந்த சில ஆண்டுகளாக தமிழக அரசின் சிறப்பு தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி திருவாரூர் மாவட்டத்தில் ஆழ்குழாய் பாசனம் மூலம் 50,000 ஏக்கரில் குறுவை சாகுபடி செய்ய வேளாண்துறை மூலம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, கோட்டூர், மன்னார்குடி, நன்னிலம் வட்டாரங்களில் மழை தொடங்கியதும் அதன் மூலம் நேரடி நெல் விதைப்பு செய்ய ஏதுவாக விளைநிலங்களை விவசாயிகள் உழுது தயார் நிலையில் வைத்துள்ளனர். மழை வந்தாலும் ஆகஸ்ட் இறுதி அல்லது செப்டம்பர் மாதம் காவிரியில் தண்ணீர் வந்தாலும் ஒரு போக சாகுபடியாவது செய்துவிடலாம் என கருதி தற்போது வயல்கள் உழுது வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திருவாரூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகனன் கூறியது: நிகழாண்டு இதுவரை காவிரியில் தண்ணீர் வராததால் வழக்கமான குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பாதிக்கக் கூடாது

என்பதற்காக தமிழக அரசு குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம் மூலம் குறுவை சாகுபடி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் திருவாரூர் மாவட்டம் முழுவதும் 50 சதவீத விவசாயிகள் வயல்களை உழுது தயார் நிலையில் வைத்துள்ளனர். மழைக் காலம் தொடங்கியதும் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டு ஒரு போக சம்பா சாகுபடியை மேற்கொள்ள உள்ளனர். விவசாயிகளுக்கு தேவையான விதைகள் மற்றும் உரங்கள் மாவட்ட நிர்வாகத்தால் தயாராக கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது என்றார்.

**அரவைக்கு ஆயிரம் டன் நெல் அனுப்பி வைப்பு**

நீடாமங்கலத்திலிருந்து அரவைக்காக கிருஷ்ணகிரிக்கு ஆயிரம் டன் சன்னரக நெல் சரக்கு ரயிலில் வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, திறந்தவெளி சேமிப்பு மையங்களிலிருந்து ஆயிரம் டன் எடை சன்னரக நெல் 75 லாரிகளில் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு வெள்ளிக்கிழமை கொண்டு வரப்பட்டது.

நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில் சுமை தூக்கும் தொழிலாளர்கள் நெல் மூட்டைகளை சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில் அடுக்கினர். இதைத்தொடர்ந்து நெல் மூட்டைகள் அரவைக்காக கிருஷ்ணகிரிக்கு சரக்கு ரயிலில் அனுப்பி வைக்கப்பட்டன.

## தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஏக்கருக்கு 100 டன் கரும்பு மகசூல்: விவசாயி சாதனை**

ஈரோடு: வெள்ளோடு விவசாயி ஒரு ஏக்கரில், 100 டன் கரும்பு மகசூல் செய்துள்ளார். ஈரோட்டை அடுத்த வெள்ளோடு வேலம்பாளையம் பகுதியை சேர்ந்த விவசாயி நடராஜன், 67. இவர் கோ-86032 கரும்பு ரகத்தில் திசு வளர்ப்பு முறையில் உருவாக்கப்பட்ட கரும்பு நாற்றின் மூலம் ஏக்கருக்கு, 100 டன் கரும்பு மகசூல் செய்து சாதனை படைத்துள்ளார். இதுகுறித்து நடராஜன் கூறியதாவது: கரும்பு நாற்றுக்கள் ஏக்கருக்கு, 6,000 வீதம், 4 அடி பாரில், 2 அடி இடைவெளியில்

நடவு செய்யப்பட்டது. நடவுக்கு முன் பசுந்தாள் உர பயிரான தக்கைப்பூண்டு, 30 கிலோ விதைத்து, 3வது மாதத்தில் ரோட்டா வேட்டர் மற்றும் கலப்பை மூலம் உழவு செய்து, 4 அடி பார் அமைக்கப்பட்டது. டி.ஏ.பி, காம்ப்ளக்ஸ், பொட்டாஷ், யூரியா ஆகியன, 60, 100, 140வது நாளில் இடப்பட்டது. 150 வது நாளில் தோகை உரிக்கப்பட்டது. இளம்பயிரில் முயல் சேதத்தை தடுக்க கருவாடு மற்றும் முட்டை கலவை தெளிக்கப்பட்டது. குருத்துப்புழு, இடைக்கணு புழு தாக்குதலை கட்டுப்படுத்த நான்கு முறை ஒட்டுண்ணி விடப்பட்டது. கரும்பு நாற்று நடவு செய்த, 12 மாதத்தில் அறுவடை செய்யப்பட்டது. நீர்பாசனம் பார் முறையில் பாய்ச்சப்பட்டது. மொடக்குறிச்சி விவசாயி, 93 டன் கரும்பு மகசூல் எடுத்ததே சாதனையாக இருந்தது. அதைவிட அதிகமாக, 100 டன் கரும்பு மகசூல் செய்தது மகிழ்ச்சியளிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**கொல்லிமலையில் பருவமழை குறைந்தது: நெல் சாகுபடி செய்ய தயங்கும் விவசாயிகள்**

நாமகிரிப்பேட்டை: கொல்லிமலையில் பருவமழை குறைந்துள்ளதால் நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் தயங்கி வருகின்றனர்.

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் காபி, மிளகு, அன்னாசி, மரவள்ளி கிழங்கு, பலா, மலைவாழை ஆகிய பயிர்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. பருவமழை மற்றும் அதனால் உருவாகும் நீரோடைகள், காட்டாறுகளை நம்பி நெல்லும் சாகுபடி செய்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த, 2015, ஜூன் வரை, 453.5 மி.மீட்டர் மழை பெய்திருந்தது. ஆனால், இந்த ஆண்டு, 189 மி.மீட்டர் மட்டுமே மழை பெய்துள்ளது. இதனால், வழக்கமாக நெல் பயிரிடும் விவசாயிகள் இந்த ஆண்டு நெல் சாகுபடி செய்ய தயக்கம் காட்டி வருகின்றனர். பருவமழையை நம்பி நெல் நாற்று விட்டாலும், தற்போது வயல் அடித்து நெல் நடவு செய்ய தயங்குகின்றனர். ஆனால், நெல் நடவுபணியில் தேவையான தொழில்நுட்ப முறைகளை வேளாண் அதிகாரிகள் விவசாயிகளுக்கு கூறிவருகின்றனர்.

இதுகுறித்து வட்டார வேளாண் உதவி இயக்குனர் சவுந்தரராஜன், வேளாண் அலுவலர் கவுதமன் ஆகியோர் வெளியிட்ட அறிக்கை: மழைபொழிவை எதிர்பார்த்தும், தற்போதுள்ள நெல் சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், செம்மேடு

வேளாண் விரிவாக்க மையத்தில் போதிய அளவு சான்று பெற்ற நெல் விதைகள் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவையான விவசாயிகள் மானிய விலையில் நெல் விதையை பெற்றுக்கொள்வதுடன், தொழில்நுட்ப ஆலோசனைகளையும் பெறலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகத்தில் 15 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறைவு**




சென்னை: தமிழகத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறித்து, மாநில நில மற்றும் நீர் வள ஆதார விவர குறிப்பு மையம் அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு வருகிறது. இதற்காக அமைக்கப்பட்டுள்ள 3,238 பகுதிகளில் உள்ள திறந்தவெளி கிணறுகள் மற்றும் 1,480 ஆழ்துளை கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் ஆய்வு செய்யப்படுகிறது. தமிழகத்தில் அந்ெதந்த பகுதிகளில் சேகரிக்கப்படும் நீர் அளவு, மொத்தமாக ஒவ்வொரு மாதமும் நீர்வள ஆதாரத்துறை மூலம் கணக்கிடப்படுகிறது.இவ்வாறு கடந்த மாதம் நீர்வள ஆதார விவர குறிப்பு மையம் சார்பில் கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்ட ஆய்வில் தமிழகத்தில் திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தர்மபுரி, கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருச்சி,

கரூர், பெரம்பலூர், சேலம், நாமக்கல், நீலகிரி, தூத்துக்குடி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய 16 மாவட்டங்களில் கடந்த ஆண்டு 2015 ஜூன் மாதத்தை ஒப்பிடுகையில் நீர்மட்டம் அதிகரித்து உள்ளது.

ஆனால், வேலூர், கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, அரியலூர், ஈரோடு, கோவை, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருநெல்வேலி ஆகிய 15 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது. ஆனால், கடந்த 5 மாதங்களாக சென்னை மாவட்டத்தின் நிலத்தடி நீர்மட்டம் தொடர்பான ஆய்வு விவரங்களை சென்னை குடிநீர் வாரியம் தற்போது வரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கர்நாடக அணைகளில் இருந்து நீர்திறப்பு மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



மேட்டூர்: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 5,159 கனஅடியாக அதிகரித்துள்ளது. கர்நாடக மாநிலம் கிருஷ்ணராஜசாகர், கபினி அணைகளின் உபரிநீர் காவிரியில் திறந்து விடப்படுவதால், மேட்டூர் அணைக்கு கடந்த ஒரு வாரமாக தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் 4,712 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று மதியம் நிலவரப்படி 5,159 கனஅடியாக அதிகரித்தது. வரத்து அதிகரிப்பால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. கடந்த 3ம் தேதி,

42.50 அடியாக இருந்த நீர்மட்டம் ஒரு வாரத்தில் 2.65 அடி வரை உயர்ந்துள்ளது.

கர்நாடகாவில் பருவமழை நீடிப்பதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரித்து, நீர்மட்டம் உயரும் பட்சத்தில், சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளது என பொதுப்பணித்துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். நேற்று மாலை நிலவரப்படி, அணையில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. நீர்மட்டம் 45.15 அடியாகவும், நீர் இருப்பு 14.89 டிஎம்சியாகவும் உள்ளது.

**கம்பைநல்லூர் வாரச்சந்தையில் பலாப்பழம் விற்பனை அமோகம்**

அரூர் : தர்மபுரி மாவட்டம் கம்பைநல்லூரில் வாரந்தோறும் நடைபெறும் வாரச்சந்தை பிரசித்தம். இங்கு காய்கறி வகைகள், பழங்கள் மற்றும் மளிகை பொருட்கள், சமையல் பாத்திரங்கள், இரும்பு சாமான்கள் விற்பனை செய்யப்படுகிறது. இந்த சந்தையில் சுற்றுப்புற பகுதியில் உள்ள கிராம மக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கிச் செல்வது வழக்கம். தற்போது, பலா சீசன் இறுதி கட்டத்தில் உள்ளதால் கேரளா மாநிலத்திலிருந்து மொத்தமாக வாங்கி வந்து வாரச்சந்தையில் பழத்தை குவித்து வைத்து விற்பனை செய்து வருகின்றனர். அளவை பொறுத்து ஒரு பழம் ரூ.70 முதல் ரூ.120 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. விலை குறைவாக இருப்பதுடன், சுவையும் நன்றாக இருப்பதால் பொதுமக்களும் பலாவை ஆர்வத்துடன் வாங்கி சென்றனர்.

**தர்மபுரி சந்தையில் ஆந்திரா மிளகாய் வற்றல் கிலோ ரூ.150க்கு விற்பனை**

தர்மபுரி : தர்மபுரி சந்தையில் ஆந்திரா மிளகாய் வற்றல் கிலோ ரூ.150க்கு விற்பனை செய்யப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், ஏரியூர் பாப்பாரப்பட்டி, இண்டூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் மிளகாய் பயிரிடப்பட்டு வருகிறது. இந்நிலையில், காரம் மிகுந்த ஆந்திரா மாநில காய்ந்த மிளகாய்களும் தர்மபுரிக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

குண்டூர் மற்றும் கடப்பா மாவட்டங்களில் இருந்து விற்பனைக்காக வரும் காய்ந்த மிளகாய்களை மக்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். வாரத்திற்கு சுமார் ஒரு டன் வரமிளகாய் வீதம் விற்பனைக்காக வருகிறது. தர்மபுரி சந்தைப்பேட்டை

மற்றும் சத்திரம் மேல் தெரு ஞாயிற்றுக்கிழமை சந்தையில் ஒரு கிலோ ரூ.150க்கு விற்பனை செய்யப்பட்டது. இதுகுறித்து மிளகாய் வியாபாரிகள் கூறுகையில், உள்ளூர் மிளகாய் வற்றல் வந்து கொண்டிருந்தது.

கடந்த 3 மாதமாக மிளகாய் வற்றல் வரத்து குறைந்து விட்டது. இதனால், ஆந்திரா வியாபாரிகளிடம் இருந்து கொள்முதல் செய்கிறோம். ஆந்திரா மிளகாய் வற்றல் மிகவும் காரமாக இருப்பதால் நமது ஊர் மிளகாயை விட ஆந்திரா மிளகாய் வற்றலுக்கு மவுசு அதிகமாக உள்ளது. தற்போது, ஆந்திரா மிளகாய் கிலோ ரூ.150க்கு விற்பனை செய்யப்படுகிறது என்றனர்.

**தர்மபுரியில் காலிபிளவர் விற்பனை அமோகம்**

தர்மபுரி : தர்மபுரியில் காலிபிளவர் விற்பனை அதிகரித்துள்ளது. தமிழகத்தில் காய்கறி சாகுபடியில், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், பாலக்கோடு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் முட்டைகோஸ், காலிபிளவர் உள்ளிட்ட ஆங்கில காய்கறிகள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ராயக்கோட்டை, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை, தளி, பாகலூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் 100 ஏக்கரில் ஆங்கில காய்கறிகளை சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்நிலையில், தர்மபுரிக்கு காலிபிளவர் வரத்து துவங்கியுள்ளது. கிலோ கணக்கிலும் மற்றும் எண்ணிக்கை கணக்கிலும் விற்பனை செய்யப்படுகிறது. தர்மபுரி உழவர் சந்தை பகுதியில் நேற்று ஒரு காலிபிளவர் ரூ.20 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. தினசரி ஒரு டன் முதல் 2 டன் வரையிலும் விற்பனையாவதாக வியாபாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து அவர்கள் கூறுகையில், ஆடி மாதம் துவங்க உள்ள நிலையில் வீடுகளில் விரதம் கடைபிடிக்கும் நடைமுறையை மக்கள் மேற்கொண்டுள்ளதால் அசைவம் தவிர்ப்பது வழக்கம். சில்லி சிக்கனுக்கு மாற்றாக காலிபிளவரை சில்லியாக்கி குழந்தைகளுக்கு கொடுப்பதால் அதன் தேவை அதிகரித்துள்ளது. இதனால், விற்பனையும் சூடுபிடிக்க தொடங்கியுள்ளது என்றனர்.

**அணை பகுதியில் மழை குறைவு சிறுவாணி நீர்மட்டம் சரிவு**

கோவை, : கோவை சிறுவாணி அணையில் 878.50 மீட்டர் வரை நீரை தேக்க முடியும். தென்மேற்கு பருவமழைக்காலம் துவங்கியது முதல் சிறுவாணி அணைப்பகுதியில் தொடர் மழைப்பொழிவு இல்லை. சில நாட்கள் அணை மற்றும் அடிவாரப்பகுதிகளில் கனமழை பெய்தது. பல நாட்கள் அணை மற்றும் அடிவாரப்பகுதியில் மழைப்பொழிவு முற்றிலும் இல்லை. சிறுவாணி அணையில் கடந்த 7ம் தேதி 115 மில்லி மீட்டர் அளவுக்கு மழைப்பொழிவு இருந்தது.

இதனால் அணையின் நீர்மட்டம் ஓரளவு உயர்ந்தது. அதன்பின், நேற்று முன்தினம் சிறுவாணி அணைப்பகுதியில் 20 மில்லி மீட்டர் மழை பெய்தது. நேற்றைய நிலவரப்படி சிறுவாணி அணையில் மழைப்பொழிவு இல்லை. மழைப்பொழிவு இல்லாததால் சிறுவாணி அணையின் நீர்மட்டம் 50 சென்டி மீட்டர் சரிந்தது. அதேபோல், சிறுவாணி நீர்பிடிப்பு பகுதிகளான அடிவாரப்பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக எதிர்பார்த்த அளவுக்கு மழைப்பொழிவு இல்லை.

மழைப்பொழிவு எதிர்பார்த்த அளவுக்கு இல்லாததால், அணையில் இருந்து சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படும் நீரின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த 7ம் தேதி 63.50 எம்.எல்.டியும், கடந்த 8ம் தேதி 61.50 எம்.எல்.டியும், நேற்றைய நிலவரப்படி 51 எம்.எல்.டியும் நீர் எடுக்கப்பட்டு சுத்திகரிப்பு மையத்திற்கு அனுப்பப்பட்டது.

**நாட்டுக்கோழி வளர்ப்பு முகாம்**

ஈரோடு, : ஈரோடு சத்தி ரோட்டில் செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவ பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் யசோதை தெரிவித்துள்ளதாவது: கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாட்டுகோழி வளர்ப்பு தொடர்பான 2 நாள் பயிற்சி முகாம் 12ம்தேதி தொடங்குகிறது. பயிற்சியில் நாட்டுகோழி வளர்ப்பு குறித்து விரிவான பாடங்கள் நடத்தப்படுவதுடன் கலந்துரையாடல், வீடியோ படக்காட்சிகள், கேள்வி, பதில் நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் பயிற்சி மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

**சர்க்கரை ஆலை விவசாயிகள் ஆலோசனை**

உடுமலை, : அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு ஒப்பந்த விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. உடுமலை அருகே உள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ஒப்பந்த அடிப்படையில் விவசாயிகள் கரும்பு வழங்குகின்றனர். பழனி மேற்கு, கிழக்கு, உடுமலை, பல்லடம், தாராபுரம், நெய்க்காரப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 5,365 ஏக்கர் கரும்பு ஆலைக்கு வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் மார்ச் மாதம் அரவை துவங்கும். இந்த ஆண்டு அரவை மார்ச் 6ம் தேதி துவங்கியது. 2.5 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயித்து பணி நடந்து வருகிறது.

இந் நிலையில், அரவைக்கு கரும்பு வெட்ட காலதாமதமாவதை கண்டித்து நேற்று விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடத்தினர். 300க்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர். விளைந்த கரும்பை வெட்ட காலதாமதம் காரணமாக ஏக்கருக்கு 50 டன் கிடைக்க வேண்டிய கரும்பு, 10 டன்தான் கிடைக்கிறது. இதனால் ஏற்பட்ட இழப்பை சரிகட்ட ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் நஷ்டஈடு கேட்டு கடந்த 4ம் தேதி ஆர்ப்பாட்டம் நடந்தது. அப்போது, 350 டன் கரும்பு வெட்டுவதாக அதிகாரிகள் உறுதியளித்தனர். ஆனால், அந்த உறுதிமொழியை நிறைவேற்றவில்லை என்று கூறப்படுகிறது. அதை கண்டித்து இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் பேசினர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

### இன்றைய வேளாண் செய்திகள்

## தென்மேற்கு பருவமழை தீவிரம்: சோலையார் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியது



வால்பாறை

வால்பாறையில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால் சோலையார் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியது. சின்னக்கல்லார் நீர்வீழ்ச்சியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

<u>பரம்பிக்குளம் அணை</u>

கேரள வனப்பகுதியில் பரம்பிக்குளம் அணை அமைந்து உள்ளது. அணை 72 அடி கொள்ளளவு கொண்டது. கேரள வனப்பகுதியில் இருந்தாலும் பரம்பிக்குளம் அணை தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் கட்டுப்பாட்டில் உள்ளது. அணைக்கு வனப்பகுதியில் பெய்யும் மழை மற்றும் நீரோடைகள் மூலமும்,

சோலையார் அணையில் மின் உற்பத்திக்கு திறக்கப்படும் தண்ணீர் மூலம் நீர்வரத்து உள்ளது.

பரம்பிக்குளம் அணை பி.ஏ.பி. பாசனத்திற்கு முக்கியமான அணையாகும். பரம்பிக்குளத்தில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் துணக்கடவு அணைக்கு செல்கிறது. அங்கிருந்து சர்க்கார்பதி மின் நிலையத்திற்கு திறக்கப்பட்டு, அங்கிருந்து காண்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

<u>நீர்வரத்து அதிகரிப்பு</u>

இந்த நிலையில் கடந்த ஆண்டு பெய்ய வேண்டிய பருவமழைகள் பொய்த்து போனதால், அணையின் நீர்மட்டம் குறைந்தது. இதற்கிடையில் கடந்த சில நாட்களாக வால்பாறை மற்றும் பரம்பிக்குளம் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்யும் தென்மேற்கு பருவமழையின் காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

சோலையார் அணையின் மின் நிலையம் –1 இயக்கப்பட்டு, 70 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் சோலையார் அணையில் இருந்து பரம்பிக்குளம் அணைக்கு வினாடிக்கு 800 கன அடியும், நீர்ப்பிடிப்பு பகுதியில் இருந்து வினாடிக்கு 700 கன அடியும் நீர்வரத்து உள்ளது. தற்போது அணையின் நீர்மட்டம் நேற்று காலை 8 மணி நிலவரப்படி 17.54 அடியாக உள்ளது. 65 மில்லி மீட்டர் மழை பெய்து. மழை தொடர்ந்து பெய்தால் மட்டுமே அணை நிரம்ப வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<u>சோலையார் அணை 100 அடியை எட்டியது</u>

இதற்கிடையே தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததை தொடர்ந்து நேற்று சோலையார் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டி உள்ளது. வால்பாறை வனப்பகுதியில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் சின்னக்கல்லார் நீர்வீழ்ச்சியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் வால்பாறையில் 60 மி.மீ மழையும், சோலையார் அணையில் 65 மி.மீ, சின்னக்கல்லாரில் 95 மி.மீ,நீராரில் 107 மி.மீ மழையும் பெய்துள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் சோலையார் அணை இன்னும்

ஒரு சில நாட்களில் அணையின் முழு கொள்ளளவான 160 அடியை எட்டி விடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**ஆண்டிப்பட்டி பகுதியில் மிளகாய் விளைச்சல் அதிகரிப்பு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி**



ஆண்டிப்பட்டி

ஆண்டிப்பட்டி பகுதியில் மிளகாய் விளைச்சல் அதிகரித்து காணப்படுகிறது. மேலும் சந்தையில் அவற்றுக்கு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>கூடுதல் லாபம்</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள புள்ளிமான்கோம்பை, தர்மத்துபட்டி, மூனாண்டிபட்டி, அணைக்கரைப்பட்டி, புதூர் உள்ளிட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடைபெற்று வருகிறது. இந்த பகுதிகளில் கத்தரி, வெண்டை, தக்காளி, மிளகாய் உள்ளிட்டவற்றை அதிக அளவில் விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். இங்கு விளையும் காய்கறிகள் ஆண்டிப்பட்டி, மதுரை, ஒட்டன்சத்திரம் ஆகிய ஊர்களில் உள்ள சந்தைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

இதற்கிடையே கடந்த சில வாரங்களாக தக்காளி விலை உச்சத்தில் இருந்த நிலையில், இந்த பகுதியில் தக்காளி பயிரிட்ட விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைத்தது. ஆனால் தற்போது தக்காளி வரத்து அதிகரித்துள்ள நிலையில், அவற்றின் கொள்முதல் விலை குறைந்துள்ளது.

<u>குண்டு மிளகாய்</u>

இந்நிலையில் ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் தற்போது மிளகாய் விளைச்சல் அதிகரித்து காணப்படுகிறது. குறிப்பாக புள்ளிமான் கோம்பை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் குண்டு மிளகாய் பயிரிடப்பட்டுள்ளது. இதற்கிடையே தற்போது சந்தையில் ஒரு கிலோ குண்டு மிளகாய் ரூ.40 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் அவற்றை பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தங்கள் நிலங்களில் மிளகாய்களை பறித்து தரம் பிரித்து சந்தைகளுக்கு அனுப்பி வருகின்றனர். மிளகாய் வரத்து அதிகமாக இருக்கும் நிலையில், நல்ல விலையும் கிடைப்பது எப்போதாவதுதான் நடைபெறும் என்பது விவசாயிகளின் கருத்தாக உள்ளது. இதன்படி அதிக விலை கிடைக்கும் நிலை இன்னும் ஓரிரு நாட்கள் மட்டுமே நீடிக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.